வேலூரில் பிச்சைக்காரர் இல்லம்.

* 216. வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை, எனினும் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை-வேலூர் சாலையில்; திருவண்ணாமலையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இடத்தில், தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம், அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே காப்பாடியில் உள்ள தொழு நோய் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அது குறித்து அரசுக்குத் தகவல் தெரியவில்லை.

திரு. கே. எ. வகாப்: தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமான தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள் என்பதனால் அங்கே ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வட ஆற்காட்டைக் காட்டிலும் தர்மபுரியில்தான் அதிகம் என்று சொல்லப்படுகிறது. இப்போது அதற்கு திருவண்ணாமலைப் பகுதியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: இந்தத் தொழுநோய் விடுதி ஒன்றை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதற்கு திருச்சியில் இருந்து தஞ்சை போகிற வழியில் ஓரிடம் எடுக்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சையில் சேரும்.

Ryots of Inam Estates

* 217 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that 500 Inam Ryots in Pudukottai went on hunger strike on 22nd March 1972 in front of Revenue Divisional Officer, Pudukottai Office;

(b) if so, the reasons therefor; and